# இல.விவகாரம் பற்றி ராவ் - விஜயதுங்கா பேசுவர்?

(கொழும்பு) பிரதமர் திரு. டி. பி. விஜேயதுங்காவும் இந்தியப் பிரதமா திரு. பி. வி. நரசிம் மராவும் இந்தோனேஷியா வின் தலைநகர் ஜகர்த்தாவில் சந்தித்து பேச்சுவார்த்தை களை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 16 இதழ் 203

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 01—09—1992


## உப்புவெளியில் இராணுவ வன்முறை அகதிரிப்பு

(திருமலை) திருமலை உப்புவெளி அகதி முகாமிலுள்ள தமிழர்கள் மீதான இராணுவ வன்முறை கடந்த ஒரு வாரமாக அதிக ரித்துள்ளன. இம்முகாமில் சுற்றிவளைப்பு நடத்தும் இராணுவத்தினா அங்குள்ள ஆண்களை கைது செய்துகொண்டு செல்கிறு கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## அரசபடையினர் — புலிகள் கும்புறுப்பிட்டியில் மோதல்

(திருமலை) திருமலை குபபுறுபிட்டிப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடு தலைப் புலிகளுக்குமிடையில் அண்மையில் நேரடி மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

### லிகளின் தாக்குதல்களினால் ஏற்படும்

# படையினரின் இழப்புக்களால்

# சர்வதேச உதவிகள் குறைகிறது!

## பொருளாதாரமும் வீழ்ச்சியுறும் ஆபத்து!

(கொழும்பு)

அண்மைக்காலமாக விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களி னால் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டிருக் கும் பாரிய இழப்புக்கள் சர்வதேச அமைப்புக்களின் அவ தானத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது. இதனால் சர்வதேச உதவிகளில் பெருவீழ்ச்சி ஏற் படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா படையினருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழப்பக்களானது இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளைப் பலவீனப்படுத்தி யிருப்பதாகவும் அது இலங்கையில் ஒருஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு அடித்தளமாக அமைந்துவிட்டதாக வும் அரசியல், இராணுவ அவதானிகள் கருத்துத் தெரிவித் துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## விசைபபபடகு கடத்தல் விசாரணை ஆரம்பம்

(மனிலா)

ஸ்ரீலங்கா கடற்படையின் விசைப்படகை விடுதலைப் புலி கள் திறமையாக கடத்தியது ராணுவத்தை பெரும் சங்கட த்துக் குள்ளாக்கியிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரி வித்துள்ளது.

ராணுவ கட்டுப்பாட்டி லுள்ள தீவுப்பகுதியல் புலிகள் சென்று சாதுரியமாகவும எது

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆயராக ஆண்டகை தோமஸ் சவுந்தரநாயகம்

(கொழும்பு)

யாழ். மறைமாவட்ட ஆய ராக தற்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயராக கடமையாற்றும் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 8-ம் திகதி யாழ். ஆயர் பதவியை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்பார்.

இவ் அறிவித்தலை கொழும் பிலுள்ள வத்திக்கான் பிரதி

[4ம் பக்கம் பார்க்க]

## தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி யோருக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ள தாக வடக்கு-கிழக்கு மாகாண சபை கல்வி கலாசார விளை யாட்டு அமைச்சு செயலாளர் ஜனப் மொஹிதீன் தெரிவித் துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 469 பேருக்கும், கிளிநொச்சியில் 157 பேருக்கும், முல்லைத்தீவில் 59 பேருக்கும், மன்னாரில் 39 பேருக்கும் நியமனம் வழங்கப் படவுள்ளது.

நியமனக் கடிதங்கள் அவ் வவ் மாவட்ட கல்விப்பணிப் பாளருக்கு அனுப்பிவைக்கப் படும். கொழும்பு கல்விச் சேவை சபையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆலோ சனைக்கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள் ளார். (க)

### கடந்த மாத தாக்குதல்களில்

## 67 படையினர் உயிரிழப்பு பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்) சடந்த மாதம் விடுதலைப் தாக்குதல்களில் 10 உயர் புலிகள் நடத்திய பல்வேறு அதிகாரிகள் உட்பட 67 சிறி லங்கா படையினர் கொல் லப்பட்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுக்கானசூழலை இல.அரசு உருவாக்கவேண்டும்

(கொழும்பு)

இனப்பிரச்னையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அரசியல் தீர்வுகான சூழலை இலங்கை அரசே உருவாக்கவேண்டும் என்று இந்தியாவின் முன்னாள்

### குஜ்ரால் கருத்து

வெளிநாட்டமைச்சர் திரு. இந்திரகுமார் குஜ்ரால் கொழும்பில் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர் களிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில் கூறியதாவது: தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு அரசியல் தீர்வுக்கு வரக்

(4ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத் தினர் தொடர்ச்சியாக பொதுமக்கள் குடியிருப்புக் களை நோக்கி ஷெல்தாக்கு தல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தி வரு கின்றனர்.

இத்தாக்குதலினால் பண்டத் தரிப்பு, வடலியடைப்பு பகுதிகளிலுள்ள மக்கள் இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

## பாதுகாப்பு படையினருக்கு தொடர்பு இல்லையாம்

(கொழும்பு)

''அழிஞ்சிப்பொத்தானை-முத்துகல-கரப்பொல கிரா மங்களில் கடந்த ஏப்ரல் மாதம் 29ம் திகதி இடம் பெற்ற படுகொலைச்சம்பவத் தில் பாதுகாப்புப்படையின ருக்கோ அல்லது பொலிசா ருக்கோ எதுவித தொடர்பும் கிடையாது,''

பாதுகாப்பு செயலாளரால் நியமிக்கப்பட்ட ஜயலத் கமிட்டி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (க)

## இனப்பிரச்னையைத் தீர்க்க ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

இனப்பிரச்னையைத் தீர்க்க தாம் சகல நடவடிக்கைகளை யும் மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற் றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

வடக்கு-கிழக்கில் நடை பெற்றுவரும் யுத்தத்தினால் தமிழ்ப்பொதுமக்கள் பெரிதும் துன்பம் அனுபவித்து வருகின் றனர். இப்பிரச்னையைத் தீர்க்க தாம் சகல நடவடிக் கைகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## தீர்ப்பு இன்று

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தல் ஆட் சேபமனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது

கொழும்பு ஹெல்ஸ்டோப் பிலுள்ள உயர்நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு தீர்ப்பு வழங்கப்படவுள்ளதால் நேற் றுத் தொடக்கமே இப்பகுதி யில் தீவிர பாதுகாப்பு ஏற் பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (கே)

குளம் அகழ்ந்து நீர்வளம் பெருக்குவோம்!

# வரி விளம்பரம்


### தேவை

வேப்பம் விதை தேவை. அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுத்துப் பணம்பெற்றுக்கொள்ளலாம்.-மின்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ-2405)

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த WELPENELA Capsules கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்- (சி-6677)

### இன்று செவ்வாய் மாற்றம்

11-9-92-ல் வியாழ மாற்றம் ரூ. 8/50 (நூலாசிரியர் Prof. சத்தியதாசன்) மற்றும் O/L கடந்தகால வினாவிடைகள், பாடசாலைக் கொப்பிகள், பத்தகங்கள் விற்பனைக்குண்டு. தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-6757)

### வைத்திய சேவை

முகப் பருக்களா? தலைமுடி வளரவில்லையா? இளமையில் தலைமயிர் நரையா? வாத ரோகங்களா? சதை வளர்ச்சி, கழலைக்கட்டிகளா? வெண் குஷ்டம், தேமல் போன்ற சர்ம ரோகங்களா? மற்றும் மாதவிலக்குக் கோளாறு, செய்வினை, பிணிதோஷம, சூனியம் போன்றவற்றால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்:- காலை 8-00 மணி பிற்பகல் 1-00 மணி வரை. வேளாங்கண்ணி வைத்திய சாலை, டாக்டர் எம். கருணாதரன், 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-6745)

## அறிவுக் களஞ்சியம்-3
3-9-92ல் வெளிவரும்
(ஏ-2400)


# அகதிமுகாம்கள் பலவற்றில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு - வலி மேற்குப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து மானிப்பாய் சண்டிலிப்பாய், நவாலி, சங்கானை போன்ற பகுதி அகதி முகாம்களில் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்கியிருப்பதால் தற்போது பல சுகாதார சீர்கேடுகள் உருவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடிநீர், மலசலகூட வசதிகள், உணவு என்பனவை பெரும் பிரச்சினையாக இருப்பதனால் அகதிகள் தற்போது பலதரப்பட்ட நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் வரை தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர். தினமும் சுகாதாரக் குறைபாடுகள் ஏற்பட்டு வருவதனால் வயிற்றோட்டம், காய்ச்சல், சளிசுரம், தடிமன் போன்ற தொற்றுநோய்கள் பரவிவருகின்றன.

பரவிவரும் தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் பெரும் முயற்சிகளை எடுத்துவருகின்றனர்.

தற்போது குடாநாட்டில் வெப்பம் அதிகரித்துக் காணப்படுவதனால் வயிற்றுளைவு, கண்எரிச்சல், உட்பட வேறு பல நோய்களும் பரவி வருகின்றது.

உடுப்புகள் வசதியற்ற நிலையில் அகதிமுகாம்களில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்கள் பாடு மிகமோசமாக இருக்கின்றது.

மாரிகாலம் ஆரம்பமாக வுள்ளதால் அகதிமுகாம்களில் உள்ளவர்கள் இன்னும் பல நெருக்கடிகளையும் எதிர் நோக்கியிருக்கின்றனர்.

தற்போது முகாம்களில் தங்கியுள்ளவர்களில் பலர் தினமும் வீடுதேடும் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள் (56-சி

# இன்று

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 1-ம் திகதி காலை 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

9ம் திகதி புதன்கிழமை காலை 6-30மணிக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியும், 10 திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழா உற்சவமும், அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் அதனைத் தொடர்ந்து மறுநாள் பூங்காவன உற்சவத்துடனும் உற்சவ நிகழ்ச்சிகள் நிறைவுபெறும் (க)

0 0 0

(உடுவில்)

ஆறும் ஆண்டுக்கும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளையுடைய பாடசாலைகளையும் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று மருதனமடம் கல்விக்கோட்டப் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் அடைக்கலமாதா ஆலயத் திருவிழா ஆரம்பமாகியுள்ளது தினசரி மாலை வழிபாடுகள் 4 45 மணிக்கு ஆரம்பமாகி சிந்தனைத்தியானத்தில் இன்று 'கிறிஸ்து காட்டும் முழு வாழ்வு நாமும்வாழ முடியுமா' என்ற தலைப்பில் வணபிதா. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளால் மறைஉரை நிகழ்த்தப்படும்.

# சுகதாரக் கருத்தரங்கு இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

தற்போதைய சுகாதாரப் பிரச்சினைகளை நோக்குமிடத்து வைத்திய சேவையால மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய நோய் கட்டுப்பாட்டிலுள்ளன. ஆனால நோய்த்தடுப்பு முறைகளைப் பயனபடுத்தி மக்களின் ஒத்துழைப்புடன் கட்டுப்படுத்த வேண்டிய நோய்கள் இன்னமும் கட்டுப்படுத்தப்படாமல் உள்ளன

எமது பகுதி சுகாதார நிறுவனங்களில் காணப்படும் மனிதவளப் பற்றாக்குறை, நோய்த்தடுப்பு சேவைக்கான வாகன வசதிகள் இல்லாமை, அண்மைக்கால யுத்த நிலைமை ஆகியவற்றினால் நோய்த்தடுப்புச் சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன

இந்நிலையில் மக்களிடையே சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பைப் பெறவும், யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் வட்டார ரீதியாக அமைக்கப்பட்ட சுகாதாரக் குழுக்களின் பிரதிநிதிகட்கு 'யுனிசெவ்' இன்றுமுதல் 4ம் திகதி வரை நான்கு நாட்களுக்குப் பயிற்சி வழங்கவுள்ளது. (154)

# இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக பண்டத்தரிப்பு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் மானிப்பாய் தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (72)

# பல்கலைக்கழகபட்டமளிப்பும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழா இம்மாதம் 5ம் திகதி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து 6ம், 7ம் திகதிகளில் இரு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது

6ம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு இராமநாதன் நுண்கலைத் துறையினரின் ஒரு மணிநேரக் கலைநிகழ்ச்சியும் 7ம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு மேற்படி நிலயத்தினரின் 'சத்தியவான் சாவித்திரி' நாட்டிய நாடக நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இதேவேளை 7ம் திகதி பி.ப. 3 மணிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரையை பேராசிரியர் சிவசாமி அவர்களும், 8ம் திகதி பி. ப. 3மணிக்கு சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையை பேராசிரியர் சண்முகநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

மேற்படி பேருரை நிகழ்ச்சிகளும் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (109-க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்


பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி: தொழில் நுட்பவலர் தரம் II ஏ

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2375 - 11 x 50 - 2925/- (மாதமொன்றிற்கு) (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்:

(அ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமை.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்.

வயது:- 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:- செய்முறைப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சைமூலமும் நடைபெறும்.

குறிப்பு:- பின்வரும் தகைமைஉடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(அ) இலத்திரனியலில் அல்லது இயந்திரப் பயிற்சித்துறைகளில் பணியாற்றக் கூடிய அறிவைப் பெற்றுள்ளோர்.

அல்லது

(ஆ) இயந்திரப் பொறியியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்தி பெற்று கடைசல் இயந்திரத்தில் பணியாற்றும் அனுபவம் பெற்றுள்ளோர்.

அல்லது

(இ) இலத்திரனியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்திபெற்று இலத்திரனியல் கருவிகளைத் திருத்துவதில் அனுபவம் பெற்றுள்ளோர்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நகதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு 23 X 10 ச. மீ அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணபங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-24. (ஏ-2404)


# கைப்பணி பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் கைப்பணிப் பொருட்காட்சி சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளை பிரதேசச்செயலர் பணிமனையில் பெற்றுக்கொள்ளும்படி தென்மராட்சிப் பிரிவிலுள்ள அனைத்து மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர் செயலாளர்களுக்கு தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (161)

# 6 லட்சம் ரூபா செலவில் பால் பதனிடும் தொழிற்சாலை

(உடுவில்

கிளிநொச்சியில் உள்ள யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் ஆறு இலட்சம்ரூபா செலவில் பால்பதனிடும் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

உள்ளூர் மூலப் பொருட்களான சுண்ணாம்பு, மணல் ஆகியவற்றை பயன்படுத்தி இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறதென்றும் இத்தொழிற்சாலை விரைவில் இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

கிளிநொச்சியில் கூடுதலாகக் கிடைக்கும் பாலைக்கொண்டு இத்தொழிற்சாலையில் உப பொருட்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மூலம் பட்டர், ஐஸ்கிறீம் போன்ற உப பொருட்கள் தயாரிக்கப்படவுள்ளது. (150

# மாட்டுவண்டி சவாரி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடாத்துகின்ற மாட்டுவண்டி சவாரிப்போட்டி 5ம் திகதி சனிக்கிழமை மாலை 3-00மணிக்கு ஆவரங்கால் மாட்டுவண்டி சவாரி திடலில் நடைபெற உள்ளது. போட்டிகள் 'ஏ' 'பி' 'சி' என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

வெற்றிபெறுவோருக்கு தங்கப்பதக்கமும் மற்றும் விலையுயர்ந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.


# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

## அறிவித்தல்

வலி வடக்குப் பிரிவு ஒத்திவைக்கப்பட்ட

## வருடாந்த பொதுக்கூட்டம்

### 1992 - 1993

மேற்படி ஒத்திவைக்கப்பட்ட வலி வடக்குப்பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06-09-1992) காலை 9-30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் வலிவடக்கு இடைக்கால நிர்வாகத் தலைவர் திரு. கே. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். ஆகவே தகுதியுடைய அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ. சி. செபநாயகம்
தலைவர்.
இடைக்கால நிர்வாகம்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
31-08-1992

(ஏ-2403)

## விநியோகிக்கப்படாத நிலையில் பாடசாலை மாணவர் அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் யாழ். அரசாங்க அதிபரால் தருவிக்கப்பட்ட அடையாள அட்டைகளில் பாடசாலைகளுக்குரியவைகள் பல இன்னு விநியோகிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. பல பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் தங்களுக்குரியவற்றைப் பெற்றுச்சென்றுள்ள போதும், கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலை அதிபர்கள் இதுவரையில் இவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லையென்று கூறப்படுகிறது.

யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி, அன்ரனிஸ் றே. க. கலவன் பாடசாலை யாழ்ப்பாணம், இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், மத்திய மகாவித்தியாலயம் நெல்லியடி, சைவப்பிரகாச வித்தியாலயம் அச்செழு, இந்துக் கல்லூரி கொக்குவில், ஜோசப் மகாவித்தியாலயம் சண்டிலிப்பாய், விநாயகர் வித்தியாலயம் யார்க்கரு கரவெட்டி, துரையப்பா வித்தியலயம் கொழும்புத்துறை, இந்துமகா வித்தியாலயம் பயிலணி உடுவில், மெய்கண்டான் மகாவித்தியாலயம் சங்கானை, மத்திய மகாவித்தியாலயம் வசாவிளான், இந்துக்கல்லூரி மானிப்பாய் ஆகிய பாடசாலை மாணவர்களுக்குரிய அடையாள அட்டைகள் இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. (161)

## தடுத்துவைக்கப்பட்ட மூவர் மாதகலில் சுட்டுக்கொலை

### ஆலய குளத்தில் சடலங்கள்

[யாழ்ப்பாணம்]

மாதகல் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தப்பிவரமுடியாமல் இராணுவத்தினரின் பிடியில் அகப்பட்ட பொதுமகளில் இளைஞர் ஒருவர் உட்பட மூவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக நேற்று முன்தினம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இம்மூவரில் ஒருவர் அப்பகுதியைச்சேர்ந்த சோமசுந்தரம் என்பவரின் மகன் எனத்தெரிவித்தனர். இவர் 24-வயது மதிக்கத்தக்கவர். மற்றைய இருவரும் 50-வயதுக்கு மேற்பட்டவர்கள் எனத்தெரிவித்தனர்.

இம்மூவரினதும்சடலங்களை மாதகல்பாணுவெட்டிஅம்மன் கோயில் குளத்தில தாங்கள் கண்டதாகவும் குளத்தில்நீரில்லாததால் மூன்றுசடலங்களும் அழுகிய நிலையில இருந்ததாகவும தெரிவித்தார்கள்.

மாதகல் நாவலர் வாசிகசாலையைச்சேர்ந்த வேலுப்பிள்ளை (60-வயது), வண்டில்கார உரிமையாளர் எஸ். சிற்றம்பலம் (75-வயது), திருமதி நல்லம்மா நடேசு (55-வயது), திருமதி லச்சுமி கணபதிப்பிள்ளை [50-வயது] ஆகிய நால்வருமே படையினரால் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர்.

மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாதகல் பிள்ளையார் கோயிலிலும், அந்தோனியார்தேவாலயத்திலும்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (56-சி)

## வலி வடக்கில் வீடுகள், கடைகளில் திருடர்கள் கைவரிசை

(ஏழாலை)

வலி வடக்கில் இராணுவ கெடுபிடிகளால் மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் வீடுகளிலும் கடைகளிலும் பல வகையான திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மல்லாகம் ஏழாலை வீதிச் சந்தையில் இயங்கி வரும் செ. இரத்தினம் என்பவரது பலசரக்குக்கடை உடைக்கப்பட்டு மேசை லாச்சியுடன் பணம், சிகரட், பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏழாலை வீதியிலுள்ள லங்காவதி ஸ்ரோர்ஸ் அருகிலுள்ள கட்டடத்தில் உள்ள பொருட்களை திருட கொள்ளையர் கதவுப் பூட்டினை உடைத்தபோது அருகில் உள்ள வீட்டார் சத்தம்கேட்டு விளக்குடன் வெளியே வந்தபோது திருடர்கள் ஓடிவிட்டார்கள். (162-சி)

## ★ சோமாலியாவில் அவலம் தொடர்கிறது பட்டினி, கொடிய நோயால் தினமும் 300 பேர் மரணம்

(லண்டன்)

சோமாலியாவுக்கு பல துறைகளிலிருந்து உணவு மற்றும் மருந்து வகைகள் வந்து குவிந்தவண்ணம் இருந்த போதும், இறப்போர் தொகை இன்னும் குறைந்தபாடில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன

சோமாலியாவின் தலைநகருக்கு 160 மைலகள் தொலைவிலுள்ள பயுடாவா நகரில் தினமும் 300 பேர் பட்டினியாலும் நோயினாலும் மடிந்து கொண்டு இருக்கின்றனர்.

கிராமப்புறங்களில் உணவு தேடி அலைந்து நகரில் மக்கள் நெருக்கமாக கூடுவதால், நோய்கள் தொற்றிக்கொள்கின்றன நகரைத் தேடிவரும் மக்களுக்கு ஒழுங்கான வீட்டு வசதிகளோ சுகதார வசதிகளோ செய்துகொடுக்கபடவில்லை

நகரங்களைத் தேடி லட்சக்கணக்கான மக்கள் வருவதனைத் தடுப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அந்தந்த பிரதேசங்களில் உணவுவகைகளை விநியோகிக்க ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

இதேவேளை வரிசையில் நின்று உணவை பெற்றுக் கொள்ள வலுவின்றி பல பேர் இறந்துவிடுகின்றனர். அத்தோடு மயங்கி விழுந்துவிடுகின்றனர். உணவு விநியோகத்துடன் பிணங்களை அகற்றும் வேலையும், நோயாளர்களை வைத்தியசாலைசட்கு அப்புறப்படுத்துவதும் செஞ்சிலுவை சங்கத்தினருக்கு கூடுதலான வேலையாக உள்ளன.

மனிதநேய நிறுவனங்கள் உதவிகளை வழங்கியே வருகின்றன. இருந்தும் நோய் வாய்ப்படுவோர் தொகை அதிகரித்தவண்ணமுள்ளன. இப்படியான மோசமான காலகட்டத்தில் உதவிகள் வழங்குவதென்பது மிக மிக கடினம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மருந்துவ உதவிகளை முதலில் வழங்குவதா? அல்லது பட்டினியால் வாடும் உயிர்களுக்கு உணவு அளிப்பதா? இதில் எதனை முதலில் செய்வது என்பதே டிகரத முயற்சி எடுத்து சேவைசெய்யும் சர்வதேச உதவி குழுக்களின முன்பு எழுந்து நிற்கும் பெரிய கேள்வி (கே)

## மாதகல பகுதியில் வீடுகள், மதில்கள் தினமும் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் தினமும் பல வீடுகளை குண்டு வைதது தகர்த்துவருவதுடன் வீட்டு மதில்களை புல்டோசரினல் இடித்து தரைமட்டமாக்குகிறார்களாம்.

மாதகல் பகுதியில் உள்ள பிரபல ஆங்கிலப் பாடசாலையிலும், பாணுவெட்டி அம்மன் கோயிலிலும உள்ள சுற்று மதில்களை இராணுவத்தினர் புல்டோசர் மூலம் தகர்த்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வீட்டு மதில்களும் நிர்மூலமாக்கப்பட்டு வேலிகள் கொளுத்தப்படுவதாகவும் வந்தவர்கள் தெரிவித்தனர்.

கோயில்களிலும் பாடசாலைகளிலும்பெரும் தொகையான படையினர் நிலைகொண்டு பனை, தென்னை, மரங்களைத் தறித்து பெரியளவில் காவல் அரண்கள் அமைத்தும் வருகின்றனராம், (56)

## இந்தியா தயாரித்த புதிய ஹெலிகொப்டர்

(சென்னை)

இந்தியாவிலேயே முதன் முதலில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பலநோக்கு நவீன லேசு ரக ஹெலிகொப்டர் பெங்களூரில் நேற்று முனதினம் வெற்றிகரமாக வெள்ளோட்டம் விடப்பட்டது.

இந்திய பாதுகாப்பு படையினருக்கும், விமானப்போக்குவரத்து பயணிகளுக்கும் பயனளிக்கும் வகையில பெங்களூரில் உள்ள 'இந்துஸ்தான் விமான இயல் நிறுவனம்' தயாரித்த இந்த ஹெலிகொப்டரின் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் இந்திய உபஜனாதிபதி திரு. கே. ஆர். நாராயணன் கலந்து கொண்டார்.

14 பேர் அமர்ந்து செல்லக்கூடிய இந்த ஹெலிகொப்டர் மணிக்கு 240 கி. மீ. வேகத்தில் செல்லக்கூடியது. எதிரிகளின் 'ராடர்' பார்வையிலிருந்தும் மறைந்தும் செல்லக்கூடியது. இது வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. (சி)

## மானிப்பாய் வீதியில் வீதிப் போக்குவரத்தில் பெரும் சிரமம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து மானிப்பாய்-ஆனைக்கோட்டை - யாழ்ப்பாணம் செல்லும் பிரதான வீதியில் மக்கள் நடமாட்டமும், வாகனப் போக்குவரத்தும் மிகவும் அதிகரித்துள்ளதால் பலத்த போக்குவரத்து நெருக்கடி இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தாங்கள் தங்கியுள்ள அகதி முகாம்களின் முன்பக்கத்தில வீதி ஓரங்களில் கூட்டம்கூட்டமாக இருப்பதால இவ்வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு விபத்துகளும் அடிக்கடி இடம்பெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சைக்கிள்களில் போக்குவரத்துச்செய்வோரும், மாட்டு வண்டில்களிலும் லாண்ட் மாஸ்டர் பெட்டிகளிலும் இடம்பெயர்ந்தமக்கள் தங்கள் வீட்டு தளபாடங்களையும் ஏனைய பொருட்களையும் ஏற்றிக்கொண்டு வருவதாலும் இந்த பிரதானவீதியில் பலதத போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அவசியமற்ற முறையில் மக்கள் வீதிகளில் கூட்டமாக நிற்பதைததவிர்க்குமாறும், போக்குவரத்து விதிகளை அனுசரிக்குமாறும் காவல்துறையினர் பொதுமக்களிடம்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (72-சி)

## இராமநாதன் நுண்கலைப் பிரிவு தனித்துறையாக மாற்றம்

(உடுவில்)

மருதனுமடம் இராமநாதன் நுண்கலைப் பிரிவு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் ஒரு தனித்துறைப் பிரிவாக மாறறியமைக்கப்பட்டுள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட இந் நிறுவனத்தின் தலைவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி திரு. சபா ஜெயராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இராமநாதன் நுண்கலைப் பிரிவில் கலைத்துறையை மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் மேலும் மூன்று இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாய்ப்பாட்டுப் பிரிவின் இணைப்பாளராக திரு. எஸ். பத்மலிங்கமும், இசைக்கருவிகள் பிரிவின் இணைப்பாளராக திரு என். சோமஸ்கந்தசர்மாவும், நடனப்பிரிவின் பொறுப்பாளராக திருமதி ப. உமா சங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (109-அ)

## இராசி பலன்

01-09-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஆவணி 16)

பஞ்சமி மு இ 11-14 வரை, சித்திரை காலை 7-00 வரை, இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை, சுப நேரம் காலை 10-35 முதல் 12-05 வரை, சித்தயோகம்.

மேடம்: ரோகநிவர்த்தி, காரியசித்தி, தொழில்வெற்றி.

இடபம்: புத்திரவிரோதம, அதிகாரிகள் சினம், வெறுப்பு.

மிதுனம்: ஸ்திரீமூலமான பயம், மனக் கஸ்டம், விரத்தி.

கடகம்: மங்களகரம், சகோதர உதவி, பிரயாசம்

சிங்கம்: சத்துருபயம், பயண அலைச்சல், விவாதம்.

கன்னி: பரிவாரம், காரிய சிறப்பு, இனசன மதிப்பு.

துலாம்: மனஸ்தாபம், தொழில் இடையூறு, கவலை.

விருச்சிகம்: குடும்பநன்மை. வாக்குவாதம், புகழ்.

தனுசு: சுபவிரயம், மனகர்வம், புத்திரர் லாபம்.

மகரம்: பந்துக்கள் துவேசம், ஏமாற்றம், சோம்பல்.

கும்பம்: வழிதவறுதல், கோபக்குணம், வேதனை.

மீனம்: புதிய ஸ்தானம், மனக் களிப்பு, காரிய லாபம்.

— ஜோஸ்யர்

## நூறு விதவைகளுக்கு புனர்வாழ்வுக் கழகம் உதவி

(உடுவில்)

வன்னிப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் விதவைகளான பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்காக விசேட திட்டங்களை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஆடு, கோழி வளர்த்தல், சிறிய கடை ஆரம்பித்தல், அரிசி இடித்து மாவாக்கி விற்பனை செய்தல் இவை போன்றவற்றிற்கு தேவையான உதவிகளை இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நூறு விதவைகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான நிதிஉதவியை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது. (150)

## திருமலை பஸ் நிலைய குண்டுவெடிப்பு மற்றொரு பஸ்சும் முற்றாகச் சேதம்

(திருமலை)

திருமலையில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பு தொடர்பாக பொலிசார் தீவிர புலன் விசாரணை நடாத்திவருகிறார்கள்.

குண்டுவெடித்த பஸ்ஸிற்கு அருகில் நின்ற பஸ் ஒன்றும் முற்றாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற சில நிமிட நேரத்தில படையினரும், பொலிஸாரும் அவ்விடத்திற்கு விரைந்து திருமலை நகரில் அமைதியை நிலைநாட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சீனாவில் 50000 குழந்தைகள் தினமும் பிறக்கின்றன

(பீக்கிங்)

சீனாவில் தினசரி 50 ஆயிரம் குழந்தைகள் பிறப்பதாக அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

சீனாவில் 42 வருடங்களுக்குப் பின்பு இம்முறைதான் வீடுவீடாகச்சென்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பின்போதே மேற்படி விபரம் தெரியவந்துள்ளது.

சீனாவிலுள்ள வைத்தியசாலைகளில் நிமிடத்துக்கு நிமிடம் குழந்தைகள் பிறப்பதினால் அவர்களைப் பாதுகாத்து பின்பு தாய்மாரிடம் ஒப்படைப்பதில் வைத்தியசாலை தாதிமாருக்குப் பெரும்சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## இலங்கை அகதிகள் திருப்பியனுப்புவதைத்தடுக்க மீண்டும் சட்ட நடவடிக்கை

[சென்னை]

தமிழகத்திலிருந்து இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை தடுத்து நிறுத்தும் நோக்குடன் மீண்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியும், தமிழர் தேசிய இயக்கமும் இணைந்து இந்த மாத இறுதியில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்யவுள்ளனர்.

இதேவேளை இந்திய அரசு இலங்கை அகதிகளை அனுப்பும் பணியில் திரும்பவும் இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

131 அகதிகள் நேற்றுவிமான மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர்.

அகதிகள் வலுக்கட்டாய மாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்ற புகாரினால், தமிழ்நாட்டு நீதிமன்றம் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை இடைக்கால தடையுத்தரவு மூலம் நிறுத்தி இருந்தது.

தற்போது ஐ. நா அதிகாரிகளின் நேரடி விசாரணையின் பின்பே அகதிகள் அனுப்பப்படுகிறார்கள் என தமிழ் நாட்டு அரசு அதிகாரிகள் விளக்கியதையடுத்து, இந்த தடையுத்தரவு நீக்கப்பட்டதனால் அகதிகளை திருப்பி அனுப்பும் படலம் ஆரம்பித்துள்ளது. (கே)

## வலிகாமம் மக்களுக்கு தென்மராட்சிப் பகுதியில் தற்காலிக குடிசைகள்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு, மேற்குப் பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களை, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்காலிகமாக குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக சாவகச்சேரிப் பகுதியில் உடனடியாக, 1500 ஓலைக் குடிசைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் 500 குடிசைகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினாலும், 500 குடிசைகள் பேரூட் நிறுவனத்தினாலும், மீதி 500 குடிசைகளை யாழ். செயலகத்தினாலும் நிறுவப்படவிருக்கின்றன. (வி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''பனைஅபிவிருத்தியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு'', என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை 2ம் திகதி யாழ் வை எம். ஸி. ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [வி]

## அரச உதவி பணம்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களுக்குரியபணம் வழங்கப்படுகிறது.

இதுவரையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் 40வயதுக்கு மேற்பட்டோருக்கடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் அரைஇறுதியாட்ட இன்று அரியாலை ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து சென். நீக்கிலஸ் கழகம் மோதும். [வி]

### அரசியல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது இலங்கை அரசின் முக்கிய பொறுப்பாகும்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும் இறுதியில் வடக்கு கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வே நிரந்தரபரிகாரமாக அமையும்.

உயிரிழப்புக்கள் நாளுக்கு நாள் பெருமளவில் ஏற்பட்டு வருகின்றன. இவைபோராளிகளும், அரசாங்கமும் நன்கு உணர்ந்து செயல்படவேண்டும்.

இந்திய அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால் அது இந்திய அரசுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு திரு. குஜ்ரால் பதிலளிக்கையில், ''இலங்கையும் இந்தியாவும் இந்தியாவும் இரண்டு இறைமையுள்ள நாடுகள் இந்திய மண்ணில் புலிகள் நடந்து கொண்டவிதம் இந்திய அரசுக்கு பிடிக்கவில்லை இதனால் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடைசெய்துள்ளது. ஆனால் இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் எப்படி நடந்துகொள்ளும் என்பது இலங்கை அரசின் ஒரு உள்நாட்டுப் பிரச்னையாகும்'' என்று கூறினார். (வி)

## இன்று

(உடுவில்)

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. பதினைந்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று செப்டெம்பர் 15-ந் திகதி தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறும். (109)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்]

ஆண்டு 9 வரலாற்றுத்துணை நூல் வெளியீடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை 02ம் திகதி புதன் கிழமை காலை 10-00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## கடற்படை ரோந்து

(பளை)

வடமராட்சி கடலில் கடற்படையினரின் ரோந்து சில தினங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல அச்சம் அடைந்து கரையோரத்திலேயே மீன்பிடித் தொழிலை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு அண்மையில் பல பாரிய கடற்படை படகுகள் நங்கூரமிட்டு தரித்துநிற்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (126)

### அரச படையினர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இம்மோதலில் படையினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### உப்புவெளியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளையில் இரவுவேளைகளில்தேடுதலென்றபோர்வையில் இம்முகாமிற்குள் புகுந்து பொலிசார் முகாமிலுள்ளவர்களைத் துன்புறுத்தி வருகிறார்கள்.

கடந்த ஒருவாரமாக இடம்பெற்றுவரும் இந்த வன்முறைகளினால் இம்முகாமிலுள்ள மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

### கடந்த மாத

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நவீனரக நீரூர்தி விசைப்படகு மற்றும் ஒரு ஆர். பி. ஜி, ஆறு ஏ கே இலகு இயந்திரத்துப்பாக்கிகளையும் ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் ஆகஸ்ட் மாதத்தில் சிறிலங்கா படைகளிடமிருந்து புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

புலிகளின் தொடர்ச்சியான இத்தாக்குதல்களினால் சிறிலங்கா படையினர் தரப்பில் பலர் படுகாயமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆகஸ்ட் மாதத்தில் வரலாற்றில் சாதனை மிக்க பல தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைக்கு வெளிநாடுகளும் மற்றும் சர்வதேச நிதி வழங்கும் ஸ்தாபனங்களும் வழங்கிவரும் கடனுதவிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். இலங்கையின் பொருளாதாரவளர்ச்சியிலும் வீழ்ச்சி நிலை ஏற்படும்.

இலங்கையில் பெருமளவு முதலீடுகளைச்செய்து தொழில் திட்டங்களை ஆரம்பிக்கும் வெளிநாடுகளின் முயற்சிகளிலும் ஒரு பின்னடைவு ஏற்படும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பெருமளவு கடனுதவிகளின் கீழ் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் ஆயுத உற்பத்தி நாடுகளும் இலங்கையின் பாதுகாப்பு நிலையில் ஏற்பட ஆரம்பித்திருக்கும் மந்த நிலை காரணமாக அதன் நேசக்கரங்களைக் கட்டுப்படுத்தக்கூடும்.

கடந்தமாதம் அராலிச்சந்தியில் ஏற்பட்ட கண்ணிவெடி விபத்து. கடற்படையின் நவீன ரோந்துப்படகு கைப்பற்றப்பட்டமை அத்துடன் ஒரு சில மாதங்களுக்கு முன் இயக்கச்சிப்பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையின் வை-8 ரக விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்கள் போன்றவை சர்வதேச அரங்கின் அவதானத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதாக தெரிய வருகிறது. (இ)

## சிறுமியின் சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று 11 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (56)

## பலஸ்தீனிய கைதிகள் 600 பேர் விடுதலை

[ஜெரூசலம்]

மேற்காசிய சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக இஸ்ரேல் 600க்கும் அதிகமான பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

இக்கைதிகள் சிறையில் சிறைத்தண்டனை காலத்தில் எழுபது வீதமான நாட்களை கழித்துவிட்டனர் என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறினார். (ரி)

## யாழ். மீனவர்களுக்கு உலர்உணவு நிவாரணம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களுக்கு வாராந்தம் இலவசமாக உலர்உணவு வீநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு செ ப மநாதன் மேற்கொண்டுள்ளார்.

இத்தொழிலாளர் குடும்பங்களுக்கும் மாதமொன்றுக்கு நான்கு தடவைகள் இலவசமாக உலர் உணவு விநியோகிப்பதற்கு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபருக்கும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளார். ஆவணி மாதம் 25-ம் திகதி தொடக்கம் இவர்களுக்கு இந்த உலர் உணவு விநியோகிக்கப்படவுள்ளது. (137)

### விசைப்படகு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வித இழப்புமின்றியும் இந்தப் படகை கடத்தி வந்தது இராணுவத்திற்கு பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இந்த விசைப்படகு கடத்தியது பற்றி பாதுகாப்பு அமைச்சு தலைமையில் உயர்மட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [கே]

### யாழ் ஆயராக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிதி செயலகம் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் புனித யுவானியார் தேவாலயத்தின் பங்குத்தந்தையாக பணிபுரிந்துவரும் வண. இராயப்பு யோசப் அடிகளார் மன்னாருக்கான புதிய ஆயராக நியமிக்கப்பட இருப்பதாகவும் இவர் ஆயராக பதவியேற்கும் வைபவம் இம்மாத இறுதியில் வத்திக்கானில் நடைபெறுமென்றும் அதன் பின்பே வண. யோசப் அடிகளார் புதிய ஆயராக மன்னார் மறைமாவட்டத்தில் நியமிக்கப்படுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### திருமலையில்

## தீவிபத்து

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள முத்துநகரிலுள்ள முஸ்லிம் அகதி முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 36 ஓலைக்குடில்கள் எரிந்து சாம்பராகின.

சமையல் அறையில் இருந்து பரவிய தீயே இந்த அனர்த்தத்தை ஏற்படுத்தியது. எனினும் எவருக்கும் காயமோ உயிர் அபாயமோ ஏற்படவில்லையென தெரியவருகிறது.

இவர்களுக்கு புதிய ஓலைக் குடிசைகள் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (கே)

### இலங்கை விவகாரம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும் இந்தியாவில் தங்கியுள்ள அகதிகள் குறித்தும் இவர்கள் முக்கியமாகப் பேசவிருப்பதாக அறிய வருகிறது.

ஸ்ரீலங்கா கடற்படையினர் மூலம் இந்திய மீனவர்களுக்கு அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் உயிரிழப்புக்கள் குறித்தும் இதன் அடிப்படையில் கச்சதீவு விவகாரம் குறித்தும் திரு. நரசிம்மராவ் திரு. விஜயதுங்காவின் கவனத்துக்குக் கொண்டு வருவார் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number B/16336/1